சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

துறைமங்கலம் சிவப்பிரகாச

சுவாமிகள் அருளிய

# சிவநாம மகிமை

## மூலமும் உரையும்



உரையாசிரியர்

**மூதறிஞர் திரு. அழகளாசிரியர்**

ஓய்வுபெற்ற தமிழ்ப்பேராசிரியர்

குகையூர்

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

துறைமங்கலம் சிவப்பிரகாச
சுவாமிகள் அருளிய

# சிவநாம மகிமை

மூலமும் உரையும்.

*உரையாசிரியர்*

**மூதறிஞர் திரு. அடிகளாசிரியர்.**
ஒய்வுபெற்ற தமிழ்ப்பேராசிரியர்.
குகையூர் அஞ்சல் - 606 306
விழுப்புரம் மாவட்டம்.

*பதிப்பாசிரியர்*

**முனைவர். அ. சிவபெருமான்**
14சி, வெள்ளிவிழாச்சாலை,
செயங்கொண்டம் - அஞ்சல்
அரியலூர் மாவட்டம்.

ISBN : 978-81-921531-0-0

கயிலாயநாதர் பதிப்பக வெளியீடு - 4

நூல் : சிவநாம மகிமை மூலமும் உரையும்

ஆசிரியர் : துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்

உரையாசிரியர் : திரு. அடிகளாசிரியர்

பதிப்பாசிரியர் : அ. சிவபெருமான்

பதிப்பு : நவம்பர் - 2011

பக்கம் : 32

அளவு : 1/8 கிரவுன்

படிகள் : 500

பதிப்பகம் : கயிலாய நாதர் பதிப்பகம்
குகையூர் அஞ்சல்
விழுப்புரம் - மாவட்டம்
606 306

அச்சகம் : தர்மு கணிணி மையம்
சிதம்பரம்.

பெரம்பலூர் மாவட்டம், துறைமங்கலம் தவத்திரு. சிவப்பிரகாச சுவாமிகள் திருமடத்தின் திருக்குடமுழுக்கு மண்டல பூசை நிறைவு நாள் (23.11.2011) நினைவாக, சிவநாம மகிமை மூலமும் உரையும் என்னும் இந்நூல் வெளியிடப் பெற்றது.

# பதிப்புரை

பெரம்பலூர் மாவட்டம் துறைமங்கலத்தில் அமைந்துள்ளது **தவத்திருசிவப்பிரகாசசுவாமிகள் திருமடம்.** இத்திருமடத்தார்களின் முயற்சியால் உழைப்பால் **கர ஆண்டு புரட்டாசித் திங்கள் 19-ஆம் நாள்** வியாழக்கிழமை *(6-10-2011)* மயிலம் பொம்மபுரஆதீனம் தவத்திரு **இருபதாம் பட்டத்துச் சுவாமிகளின்** அருளாணையின் வண்ணம் திருக்குடமுழுக்கு வெகு சிறப்பாக நிகழ்ந்தேறியது.

மேற்படி, திருமடத்தின் திருப்பணிக்குழுவினர் நன்கொடை வேண்டி, வேண்டுகோள் மடல் ஒன்றை அனுப்பியிருந்தனர். இதுபற்றி என் தந்தையார் மூதறிஞர் **பேராசிரியர் திரு. அடிகளாசிரியரிடம் வினவினேன். அதற்கு அவர், திருப்பணிக் குழுவினர் தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகளுக்குக் கற்கோயில் பணி செய்து திருக்குட முழுக்கை நிகழ்த்தியுள்ளனர்; இச்செயல் அரிய பெரிய செயலாகும்.** நாமும் நம்பங்கிற்குச் **சொற்கோயில்** கட்டி உதவுவோம் என்றார். ஆதலால் அவரின் சொற்படி தவத்திரு **சிவப்பிரகாச சுவாமிகள்** அருளிய முப்பத்துநான்கு நூல்களுள் ஒன்றாகிய, **சிவநாம மகிமை** என்னும் நூலிற்கு உரையெழுதி வெளியிட்டுள்ளோம்.

அடியேன், குகையூர் கயிலாயநாதர் இறைவன் பெயரில் **கயிலாயநாதர் பதிப்பகம்** என்ற ஒன்றை நிறுவி நல்லபல நூல்களைச் சொந்தப் பொருட் செலவில் வெளியிட்டு வருகின்றேன். ஆதலால் அப்பதிப்பகத்தின் சார்பில் இந்நூலை **மண்டலபூசை நிறைவு நாளில்** வெளியிட்டுள்ளேன்.

இந்நூலை அச்சிட்டு வெளிப்படுத்த உதவிய அன்பு நெஞ்சங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி. **தவத்திரு. சிவப்பிரகாச சுவாமிகள் அருளாணையே இப்பணிக்கு அடியாகும்.**

இங்ஙன்

*23.11.2011* அ. சிவபெருமான்

உ

இறைவன் துணை

# உரையாசிரியர் உரை

**(திரு. அடிகளாசிரியர்)**

**பூவாய் நெடுங்கோட்(டு) உறுபசுந்தேன்**
**கைகால் முடங்கு பொறியிலிதன்**
**நாவாய் ஒழுகிற்(று) எனஉலகம்**
**அளந்த மாலும் நான்முகனும்**
**காவாய் எனநின்(று) ஏத்தெடுப்பத்**
**தானே வந்(து)எம் கரதலத்தின்**
**மேவா அமர்ந்த மாமணியைத்**
**தொழுது வினைக்கு விடைகொடுப்பாம்.**

-சிவப்பிரகாசர்

*கற்பனைக் களஞ்சியம் என்று போற்றப்பெறும் தவத்திரு.* **துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்** *மிகச்சிறந்த ஞானியாவார். இவர், வீரசைவம், சைவசித்தாந்தம், வேதாந்தம் முதலியவற்றின் சமய உண்மைகளை நன்குணர்ந்தவராவார். இத்தகைய அறிஞர் தம் வாழ்நாளில்* **முப்பத்து நான்கு நூல்களை** *அருளியுள்ளார். அம்முப்பத்து நான்கு நூல்களுள்* **சிவநாம மகிமை** *என்பதும் ஒன்றாகும்.*

**சிவநாம மகிமை** என்னும் இந்நூலுள் வந்துள்ள **சிவசிவ** என்னும் சொற்கள் இறைவனுடைய பெயராதல் வேண்டும். ஸ்ரீவ: என்பது வடமொழியில் சிவன் பெயராக வழங்கப் பெறுகிறது; இது புருடலிங்கம். தமிழ்மொழி சிவனை ஆண்பாற் பெயராக அழைக்கும். திருநாவுக்கரசர் "**சிவன் என்னும் நாமம் தனக்கே உடைய செம்மேனி அம்மான்**" என்பர். சிவரகசியம் என்னும் நூல் சிவனை இரண்டெழுத்தால் **சம்புவி** என்றழைக்கும். சித்தாந்தசிகாமணி **சிவம்** என்னும் திகழ் ஈரெழுத்தொருமொழி என்று கூறியுள்ளது நோக்கத் தக்கது.

ஸ்ரீவ: அல்லது சிவன் என்னும் சொல் தமிழிலக்கண விதிப்படி விளி ஏற்கும் பொழுது சிவனே சிவனே என்றவாறு ஏகாரம் பெற்றும், சிவ என இறுதி எழுத்து அழிந்தும் விளி ஏற்கும். சிவனை முன்னிலைப்படுத்தி அழைக்கின்ற சிவ என்கின்ற பெயர் **சிவனே சிவனே** என்றாற் போல **சிவ சிவ** என இரட்டித்து நின்றது.

சிவ: அல்லது சிவன் என்கின்ற இரண்டெழுத்துப் பெயரே முதல் பெயர் என்றும், **சிவ சிவ** என்னும் பெயருடன் **நமக** சேர்ந்து அஞ்செழுத்து மந்திரம் ஆயிற்று என்றும் அறிஞர் கூறுவர்.

அட்டாதச ரகசியத்தில் **பிள்ளை லோகாச்சாரியர்** சிவ: என்னும் பெயர் திருமாலைக் குறிக்கும் என்றும் கூறியுள்ளார். சிவ என்னும் சொல் அருகதேவனைக்

குறிக்கும் என்று சமணர்கள் கூறியுள்ளது கருதத்தக்கது. இருப்பினும் **திருநாவுக்கரசர்** கூறியவாறு, சிவம் என்னும் நாமம் தனக்கே உரிய செம்மான் என்பதே சாலப் பொருத்தமாம். சிவன் என்ற பெயர்க் காரணத்தை அறிய,

**முத்த னாகிநின் றநாதியே மும்மலங் களினும்**
**சுத்த னாதலின் மங்கல முழுவதும் தோன்றற்கு**
**உய்த்த தோரிட மாதலின் சிவம்என உரைப்பர்**

*(சித்தாந்த சிகாமணி, பஞ்சா - 8)*

என்ற பாடலடிகள் சான்றாகும்.

பரப்பிரமத்திற்குச் சிவமென்னும் பெயரே முக்கியப் பெயரென்றும், ஏனைய பெயர்களெல்லாம் முக்கியமல்லாததாகக் (கவுணமாகக்) கொள்ளப்படும் என்றும் அறிக. இக்கருத்தினை,

**சிவமெனுந்திகழ் ஈரெழுத் தொருமொழி சிறப்பாய்ப்**
**பவமகன்றுள பரப்பிர மந்தனைப் பயக்கும்**
**நவைய கன்றுயர் சிவமெனும் பெயரலாநாமம்**
**எவையம் நீக்குறு கவுணமாய் விரியுமென்றிசைப்பர்**

*(சித்தாந்த சிகாமணி)*

என்னும் பாட்டால் அறிக.

இராமலிங்கானுசாசன லிங்கபட்டீய உரையில் சிவன் என்பதற்கு உரிய பெயர்க்காரணம் பின்வருமாறு குறிக்கப்பட்டுள்ளது.

1. **ஸ்ரீவ :** பிரம்மானந்த சொரூபராயும் நிர்விகாரரராயும் இருக்கிறவராகையால் சமை அமைந்திருக்கிறவர் (சமையுள்ளவர்)

2. **ஸ்ரீவ :** இவரிடத்தில் நல்லவர் தம்மனங்கள் இருக்கின்றன.

3. **ஸ்ரீவ :** சாதுக்களின் மனங்களில் சயனித்திருப்பவர்

4. **ஸ்ரீவ :** சுபத்தோடு கூடியவர்

5. **ஸ்ரீவ :** சுபங்களைத் தருபவர்.

இதுகாறும் சிவ என்பதற்குக் கூறப்பட்ட பல பெயர் விளக்கங்களை அறிந்தோம். தெய்வ வழிபாட்டில் தெய்வத்தை முன்னிலைப்படுத்தி விளித்து அழைத்துப் பரவுதல் தமிழர்தம் நெறியாகும். இந்நெறியைத் **தொல்காப்பியம், தேவர்ப்பராய முன்னிலைக் கண்ணே என்றவாறு குறித்துள்ளது. இத்தொல்காப்பிய நெறிப்படியே சிவப்பிரகாசர் சிவசிவ என்மினே என்று முன்னிலைப்படுத்தி விளித்துள்ளார்.**

வழக்கம் போல் எனது நூல்களைப் பதிப்பித்து வழங்கும் இளையமகன் **அ.சிவபெருமானின்** அரிய முயற்சியால் இந்நூல் அச்சேறியுள்ளது. இவரின் முயற்சியால் இந்நாள்வரை **இருபத்தாறு நூல்கள்** பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

**துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய சிவநாம மகிமை மூலமும், அதற்கு மூதறிஞர் பேராசிரியர் திரு. அடிகளாசிரியர் எழுதிய உரையும்.**

**1. வேதம் ஆகமம் வேறும் பலப்பல**
**ஓதி நாளும் உளம்தடு மாறன்மின்!**
**சோதி காண்இருள் போலத் தொலைந்திடும்**
**தீ(து)எ லாமும் சிவசிவ என்மினே!.**

## குறிப்பு:

*சோதி - சூரியன்.*

## பொழிப்புரை

*உலகீர்! வேதாகமாதிகளை உணர்ச்சியால் தொலைதற்கு அரிய தீங்கு முற்றும் சூரியனைக் கண்ட இருளில் தொலையும், ஆகலின் சிவசிவ என்னும் மந்திரத்தையே உச்சரிப்பீராக.*

மேற்கருத்தினை,

**மறையொரு நான்கும் பல்லோர்**
**மாசிலஞ் செழுத்தை வல்லோர்**
**நெறியிலாப் பதித ரேனும்**
**நிகழ்த்துமஞ் செழுத்தை ஓதில்**
**உறைதரு பாவம் நீங்க**
**உயர்கதி சேர்வ ரென்னாக்**
**கறைமிடற்(று) இறைவன் தேவி**
**தன்னொடுங் கழறி னானே**

*என்னும் வாயுசங்கிதையானும் உணர்க.*

## ஒப்பு

அ. **வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது**
**நாதன் நாமம் நமச்சி வாயவே**

*(நமச்சிவாயத் திருப்பதிகம் - 1)*

ஆ. **சிவமெ னுந்திகழ் ஈரெழுத் தொருமொழி சிறப்பாய்ப்**
**பவம் அகன்றுள பரப்பிர மந்தனைப் பயக்கும்**
**நவைய கன்றுயர் சிவமெனும் பெயரலா நாமம்**
**எவையும் நீக்குறு கவுணமாய் விரியமென் றிசைப்பர்.**

*(கவுணம் - முக்கியமல்லாதது)*

*(சித்தாந்த - பஞ்சாட்சரச் செய்யுள் - 9)*

**இ. ஆத லாற்சிவ மெனும்இரண் டெழுத்துமே அளவில்**
**சோதி யாயுறு சச்சிதா னந்தமாய்த் தோன்றும்**
**ஆதி நாயகன் தனக்கு முக்கியப் பெயராம்என்று**
**ஓது மாமறை முதலிய கலையெலாம் உவந்தே.**

*(மேலது, செய்யுள் - 10)*

**ஈ. இணைய நாமமுற் றஞ்செழுத் தென்னும்மந் திரமாம்.**

*(மேலது, செய்யுள் - 11)*

## மற்றோர் குறிப்பு:

விதந்தும் ஒன்றினுள் ஒன்று அடங்கியும் நிற்கப் பெறுதலின், பஞ்சாக்கரத்தின் பேதமாகிய எட்டெழுத்து, ஆறெழுத்து, நாலெழுத்து, மூவெழுத்து, ஈரெழுத்து முதலியவும் பஞ்சாக்கரம் எனப்படும் என்பது ஆன்றோர் கொள்கை. இது பற்றியன்றே திருமந்திர நூலாசிரியரும் சிவன், அருள், ஆன்மா, திரோதம், மலம் என்பவற்றை முறையே உணர்த்தும் (சிவயநம) சூக்கும பஞ்சாக்கரத்தின்பாற்படும் என்பது தோன்ற சிவசிவ என்னும் மந்திரத்தைச் சூக்கும பஞ்சாக்கரத்து அடக்கியதூஉம் என்க.

**அமரகோசம்** என்கின்ற வடமொழி நிகண்டு முதல் அத்தியாயத்தில் சிவபெருமானுடைய பெய்ரைச் சொல்லும் பொழுது **சிவ** என்பதைச் சிவபெருமானின் ஆண்பால் பெயராகக் குறித்துள்ளது. அதே நிகண்டில் உமாதேவியினுடைய பெயரைக் குறிக்கும் பொழுது **சிவா** என்பதை, பெண்பால் பெயராகக் குறித்துள்ளது.

மேற்குறித்த இரண்டு எழுத்துக்களையும் ஒன்றாகச் சேர்த்தால் **சிவசிவா** என்கின்ற பெயர் ஒலிப்பு கிடைக்கும். ஆதலால், நாமெல்லாம் ஒன்று கூடி **சிவசிவா** என்று சொல்லி சிவபெருமானையும் உமாதேவியையும் வணங்குவோம்.

2. புல்லர் ஆயினும் போதகர் ஆயினும்
சொல்லின்[1] நாவிற் சுருதி விதித்திடும்
நல்ல வாகும் நவைஎன்(று) அகற்றிய
செல்லல் தீரும் சிவசிவ என்மினே.

## பாடபேதம் :

*1. சொல்வராயின்.*

## பொழிப்புரை :

உயர்ந்தோரேனும் தாழ்ந்தோரேனும் நாவின் உச்சரிக்கின் சுருதி விதித்திடும் நல்லன சித்திக்கும்; தீயன விலகும்; ஆதலின் சிவசிவ என்று உச்சரிப்பீராக.

மேற்பாடல் கருத்தை,

**உவமையிலா வப்பெயரை நினைக்கிற் கேட்கில்**
**ஓதிடிற்பா வப்பகைக ளெல்லா மோட்டித்**
**தவமுதல்வ ராகுமா திக்க நல்கும்**
**சாற்றரிய பேரின்பந் தரும்**

என்னும் சிவரகசியத்தானும் உணர்க.

மேற்பாட்டு,

**"நல்லவர் தீயரெ னாது நச்சினர்**
**செல்லல் கெடச்சிவ முத்தி காட்டுவ"**
(பஞ்சாக்கரத் திருப்பதிகம்)

என்னும் திருஞானசம்பந்தர் தேவாரத்தை அடியொற்றியது.

## குறிப்பு:

செல்லல் - காரியவாகுபெயர்

என்மின் - முன்னிலைப் பன்மை வினைமுற்று.

3. நாக்கி னாலும் நயனங்க ளானும்இவ்
ஆக்கை யானும் அருஞ்செவி யானும்நம்
[1]மூக்கி னானும் முயங்கிய தீவினை
தீர்க்க லாகும் சிவசிவ என்மினே.

## பாடபேதம்:

*1. மூக்கினாலும்.*

## பொழிப்புரை:

நாக்கு, நயனம், உடம்பு, செவி, மூக்கு ஆகிய ஐம்பொறிகளால் வரும் தீவினைகளைத் தீர்க்க **சிவசிவ** என்று உச்சரிப்பீராக. இதனை,

**இனைய மந்திரத் தியல்புணர்ந்**
**தோர்பொழு திசைப்போர்**
**அனையர் தம்முழைப் பண்ணியம்**
**யாவையும் அடங்கும்**
**வினையும் நீங்குவர் மேதினி**
**புரந்தினி தளிப்பர்**
**புனையும் மேற்பதம் புகுவர்முத்**
**தேவரிற் பொலிவர்.**

என்னும் உபதேசக் காண்டத்தால் உணர்க.

4. சாந்தி ராயணம் ஆதி தவத்தினான்
வாய்ந்த மேனி வருத்த இறந்திடாப்
போந்த பாதக மேனும் பொருக்கெனத்
தீந்து போகும் சிவசிவ என்மினே.

## பொழிப்புரை :

*சாந்திராயணம் முதலிய தவச்செயல்களால் சரீரத்தை வாட்டியக்காலும் அழியாது தொடரும் பாதகமும் சிவநாம சரணத்தால் விலகுமாகலின் சிவசிவ என்று உச்சரிப்பீராக. இதனை,*

**மூவுலகும் சிவநாமம் தனக்கு நேரா**
**மொழிவதனுக்கு ஒன்றுண்டோ வரையின் சாரன்**
**மேவிஇருந் தருந்தவர்கள் புரியும் பேறு**
**மிக்கவிதற் கிணையாக விளம்ப லாமோ**

**சம்புவின்றன் பெயராகு மிரண்டெ முத்தும்**
**ஒருதரஞ்சாற் றிடிற்கோடி பவந்தா நீங்கி**
**உம்பருஞ்சேர் வரிய முத்தி சேர்வர்**

*என்னும்* **சிவரகசியத்தானும்** *சாந்திராயணம் முதலியவற்றைச்* **சிவதருமோத்தரம்** *பரிகார இயலானும் உணர்க.*

5. **வில்லிது என்ன விளங்கும் திருநுதல்**
**வல்லி பங்கன் மலரடி காணிய**
**கல்வி நல்கும் கருத்து மகிழ்வுறும்**
**செல்வம் நல்கும் சிவசிவ என்மினே.**

## பொழிப்புரை

*பார்வதி சமேதராகிய பரசிவனது திருவடி காண்டற்கு ஏதுவாகிய சாத்திர உணர்ச்சிகளையும், உவந்தற்கு ஏதுவாகிய ஐசுவரியங்களையும் தருமாதலின் சிவசிவ என்று உச்சரிப்பீராக. இதனை,*

**விரவுசிவ பதம்விரும்புஞ் செல்வ மெல்லாம்**
**மேவுகின்ற இடமாகும் உயிர னந்தம்**
**தருமிடமாம் மேலான முத்தி வீடு**
**தாமிருக்கும் இடமெனவும் சாற்ற லாமே.**

*என்னும் சிவரகசியத்தானும் உணர்க.*

6. **தீய நாளொடு கோளின் செயிர்தபு**
**நோய்அ கன்றிடும் நூ(று)எனக் கூறிய**
**ஆயுள் பல்கும் அறம்வளர்ந்(து) ஓங்குறும்**
**தீய தீரும் சிவசிவ என்மினே.**

## பொழிப்புரை

தீமை உடையனவாகிய நட்சத்திரங்களோடு நவகோள்களின் தீங்கு அகலும்; பிறவியாகிய எத்தகைய நோயும் விலகும்; ஆயுள் கூடும்; தருமம் பெருகும்; மற்றைய கொடுமை விளைப்பன பலவும் விலகும்; ஆதலால், சிவசிவ என்று உச்சரீப்பீராக.

மேற்கருத்தினை,

**நமவென்னும் நாமத்தை நாவிலொ டுக்கிச்**
**சிவமென்னும் நாமத்தைச் சிந்தையுள் ளேற்றிற்**
**பவமது தீரும் பரிசும தற்றால்**
**அவமதி தீரும் அறும்பிறப் பன்றே!**

என்னும் திருமந்திரப் பாடலால் உணர்க.

## ஒப்பு

அ. தீயநாள்

**ஒன்பதொடு ஒன்றொடு ஏழு பதினெட்டொடு ஆறும்**
**உடனாய நாள்கள் அவைதாம்**

**ஆ. ஆதிரை பரணிகார்த்திகை ஆயிலியமுப்புரம் கேட்டை**
**தீதுறுவிசாகம் சோதி சித்திரை மகம் ஈராறு**

மேற்கூறியவைத் தீமையைக் கோளொடும் கூட்டித் தீயகோள் என்று கொள்க. அவை ஞாயிறு, திங்கள்.... என்ற கோளறுதிருப்பதிகப்பாட்டின் கருத்தைக் கொண்டது மேற்பாட்டு.

7. வருந்தி ஆற்றி வளர்த்த கதிர்த்தலை
பொருந்து வான்பயிர் போற்றுநர் போலவே
விரிந்த வேணியில் வெண்மதி சூடிபின்
திரிந்து காப்பன் சிவசிவ என்மினே.

## பொழிப்புரை

*மிகமுயன்று உண்டாக்கி வளர்த்த கதிர்களைத் தலையில் கொண்ட பயிரை அகலாது காக்கும்* **வறியர் போலச்** *சிவபெருமான் (அவாவிப்) பின் திரிந்து காத்தருளுவர். ஆதலால், சிவசிவ உச்சரிப்பீராக. இதனைப்,*

**பண்ணவ னுருவாம் பஞ்சப்**
**பிரமங்கள் பழுதொன் றில்லா**
**அண்ணலஞ் செழுத்தின் மன்னி**
**அடைவினில் அமரு மந்த**
**நண்ணுமஞ் செழுத்துக் கூறு**
**நம்பனே விளைக ளெல்லாங்**
**கண்ணறக் களைந்து மாற்றிக்**
**கனிந்தருள் புரிவ னன்றே**

*என்னும் வாயுசங்கிதையானும் உணர்க.*

## குறிப்பு:

*1. வளர்த்த பயிரென இயைக்க.*

*2. வெண்மதி சூடி என்பது வினைக்குறிப்புப் பெயர்.*

8. முந்தை யோர்சொல் மொழிந்து சிவன்என
நிந்தை தானச் சிவனை நிகழ்த்தினும்
வந்த தீவினை மாற்றுவன் ஆதலால்
சிந்தை யோடு சிவசிவ என்மினே.

## பொழிப்புரை:

முன்னர் சிவன் என்னும் நாமத்தை உச்சரித்துப் பின்னர் அச்சிவபெருமானை இகழினும் அந்நாமத்திற்குரிய அப்பெருமான் உச்சரித்தவனது தீவினையை ஒழித்து அருளுவன்; அது அத்தகைய மேன்மையுடையதாகலின் மனவொற்றுமையோடு **சிவசிவ** என்று அதனையே உச்சரிப்பீராக.

சிவநிந்தை கூறியோர் சிரசைக் கொய்வதே யல்லது அவர் வாய்க்கு வேறு பரிகாரம் இன்று என்பது நூற்றுணிபாயினும், சிவநாமேச்சாரணம் அத்தகைய பாவத்தையும் முற்றுமொழித்து முத்தியும் பாவிக்கவல்லதாதல் பற்றி, அந்நாமத்திற்குரிய பெருமான் தம்மையிகழ்ந்த தவறையும் நோக்காது அதனால் எய்திய தீவினையையும் மாற்றா நிற்பர் என்பது கருத்து. இதனை,

**விரியும் வேதத்தின் சாரமாய் விரித்தெடுத் துரைத்தற்**
**கரிய உட்பொருள் உடையவாய் அழிவிலா முத்தி**
**பரிவின் றாகநன் களிக்குமைந் தெழுத்தினைப் பகர்தற்**
**குரிய நாவினர் முத்திவீ டுறாதொழி குவரோ.**

என்னும் இலிங்க புராணத்தானும் உணர்க.

9. **நீச ரேனும்வான் ஈசர் நிகழ்த்தில்வான்**
**ஈச ரேனும் சிவசிவ என்கிலார்**
**நீசரே என்று இயம்புறும் நின்(று)உப**
**தேச நூல்கள் சிவசிவ என்மினே.**

## பொழிப்புரை

*சிவநாமத்தை உச்சரிப்போர் புலையராயிருப்பினும் தேவாதிபராவார்; உச்சரியார் தேவாதிபராயிருப்பினும் புலையரேயாவர் என்று நிற்கும் உண்மைப் பொருளை உபதேசிக்கும் நூல்களாகலின் சிவசிவ என்று உச்சரிப்பீராக. இதனைச்,*

**சிவசிவ என்கிலர் தீவினை யாளர்**
**சிவசிவ என்றிடத் தீவினை மாளும்**
**சிவசிவ என்றிடத் தேவரு மாவர்**
**சிவசிவ என்னச் சிவகதி தானே**

*என்னும் திருமந்திரப்பாட்டால் உணர்க.*

## ஒப்பு

**நெக்கு ளார்வம் மிகப்பெரு கிநினைந்து**
**அக்கு மாலைகொ டங்கையில் எண்ணுவார்**
**தக்க வானவ ராத்தகு விட்டது.**
**நக்கன் நாமம் நமச்சி வாயவே**

*(3.நமச்சிவாயத் திருப்பதிகம்)*

10. **எண்ணி நெஞ்சில் சிவசிவ என்பவர்**

**வண்ணம் என்பதம் கிட்டி வணங்கவும்**

**உண்ண டுங்குவன் ஒண்றிறல் கூற்றுவன்**

**திண்ணம் ஈது சிவசிவ என்மினே.**

## பொழிப்புரை

*சிவநாமோச்சாரண முடையவர் திருவடிகளை அணுகி வணங்குதற்கும், இயமன் மனம் நடுங்கா நிற்பன்; இது சத்தியமாகலின் சிவசிவ என்று உச்சரிப்பீராக. இதனைப்,*

**பஞ்ச பாதக ராயினும் பாவமே**

**தஞ்ச மாகச் சரிப்பவ ராயினும்**

**நஞ்ச யின்றவன் நாமம் உரைப்பரேல்**

**அஞ்சம் அஞ்சுமன் நெஞ்சகம் அஞ்சுமால்**

*என்னும் உபதேசக் காண்டத்தானும் உணர்க.*

**ஒப்பு:**

அ. **கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்**

**கொடுநோய் களான பலவும் அதிகுணம் நல்லநல்ல**

*(கோளறு பதிகம்)*

ஆ. **இயமன் தூதரும் அஞ்சுவர்**

*(நமச்சிவாயத் திருப்பதிகம், 4)*

## அறுசீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

11. இழிவுறுபுன் கருமநெறி யினன்எனினும்
கொலைவேடன் எனினும் பொல்லாப்
பழிமருவு பதகன்எனி னும்பதிதன்
எனினும்மிகப் பகரா நின்ற
மொழிகளுள்முற்(று) அவசனாய்ச் சிவசிவ என்று
ஒருமுறைதான் மொழியில் அன்னோன்
செழியநறு மலரடியின் துகள் அன்றோ
எங்கள்குல தெய்வம் என்ப.

## பொழிப்புரை

*எத்தகைய இழிஞராயினும் தாம்கூறும் வாக்கியங்களுள்ளே தம்வசமிலராய் ஒருதரம் சிவசிவ என்று கூறின், அன்னோர் திருவடித் துகள்களே எமது குலதெய்வம் என்பர்.*

*சிவசிவ என்பது இரக்கக் குறிப்பின் கண்ணும் வரும். ஆகலின், அங்ஙனம் அடித்தி பூர்வமாக மொழியினுமென்பார், பகரா நின்ற மொழியவற்றுள் அவசனாய் மொழியினும் என்றார்.*

## ஒப்பு

**உன்னையான் சிவனெனவே பாவிக் கின்றேன்**
**உனக்கிணையா உலகத்தில் ஒருவ ரில்லைப்**
**பன்னுமனத் தினிற்தோன்றும் பழிபா வங்கள்**
**பண்ணியநல் லாற்றருமம் செய்தி லாயே**
**இந்நிலையுற் றனையிறக்குங் காலந் தன்னில்**
**இறைவர்சிவ நாமங்கா வரப்பெற் றாயால்**
**அன்னதனால் செய்யும்பா வமெல்லாம் நீங்கி**
**அம்புவியில் சீவன்முத்தன் எனஉற் றோயே.**

*என்னும் சிவரகசியத்தானும் உணர்க. இப்பாட்டு திருமால் வியந்த பாட்டாகும்.*

**கொல்வ ரேனும் குணம்பல நன்மைகள்**
**இல்லா ரேனும் இயம்புவ ராயிடின்**
**எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பனில்**
**நல்லார் நாமம் நமச்சி வாயவே.**

*(நமச்சிவாயத் திருப்பதிகம் - 5)*

## குறிப்பு:

*1. அதிபாதகராயினோரும் சிவநாமோச்சாரணத்தால் அப்பாதங்களிலிருந்து நீங்கி சிவகதி எய்தினமை பற்றி சிவரகசியம், உபதேசகாண்டம், இலிங்க புராணம், வாயுசங்கிதை முதலியவற்றுள்ளும், தலபுராணங்களுள்ளும் பற்பல சரித்திரம் உள்ளன. உய்த்துணர்க விரிப்பின் பெருகும்.*

*2. என்ப, என்பது நூலாசிரியர் கூற்றாம்.*

# பின்னிணைப்பு - 1

## சிவாயநம எனனும் ஐந்தெழுத்து மந்திரம்

சிவாகமங்கள் '**சிவ**' என்கின்ற சொல்லை வேர்ச் சொல்லாகக் கொண்டு, நான்காம் வேற்றுமைப் பொருளை உணர்த்தும் '**ய**' காரத்தை, அதனுடன் சேர்த்து, '**சிவய**' என்று ஆக்கி, அதனுடன் வணக்கம் என்று பொருள்படும் '**நம**' என்ற வினைச்சொல்லையும் சேர்த்து '**சிவயநம**' என்று ஆக்கிக் கொண்டுள்ளன.

இதற்குச் **சிவனுக்கு வணக்கம்** எனபது பொருளாகும். வினைமுற்றுச் சொல்லை, முன்வைத்து, பெயரை ஈற்றில் வைத்து, சேர்த்துச் சொல்லும் முறையில் கூறினால் '**நமசிவய**' என்று ஆகும். இதற்கு வணக்கம்சிவனுக்கு என்பது பொருளாகும். பெயர்ச்சொல்லை முதலில் வைத்து வினைச் சொல்லை ஈற்றில் வைத்துச் சேர்த்துச் சொல்லும் முறையில் கூறினால் '**சிவயநம**' என்று ஆகும். இதற்குச் சிவனுக்கு வணக்கம் என்பது பொருளாகும்.

இந்த இரண்டு முறைகளில் அறிஞர் '**நமசிவய**' என்பதைத் **தூல பஞ்சாக்கரம்** என்றும், '**சிவயநம**' என்பதைச் **சூக்கும பஞ்சாக்கரம்** என்றும் வழங்கி வருகின்றனர்.

தூல பஞ்சாக்கரத்தில் வினை முதலாக உள்ளது. சூக்கும பஞ்சாக்கரத்தில் பெயர் முதலாக உள்ளது. இந்த இரண்டு வழக்கங்களையும் திருமுறை முதலானவற்றில் நாம் பார்க்கின்றோம்.

## வேறுமுறை

**திருமூலர்** முதலான தத்துவ ஞானிகள் சமயப் பொருள்களை, பேற்றினைப்பெறும் **சீவன்** ஒன்று, பேற்றினைஉதவும் அருள் என்னும் **பரன்** ஒன்று, பேறாய் இருக்கும் **சிவம்** ஒன்று, பேற்றினைப் பெறும் சீவனிடத்தில் இயல்பாய் உள்ள ஆணவமலம் ஒன்று, அந்த ஆணவ மலத்தை இயக்கும் பரனிடம் உள்ள திரோதமலம் ஒன்று, என ஐந்து பொருள்களாக வகுத்துக் கொண்டனர்.

இந்த ஐந்து பொருள்களையும் திரு ஐந்தெழுத்தில் வைத்துக் கணிக்கக் கருதி, '**ய**' காரத்தைச் சீவனுக்கும், '**வ**' காரத்தை அருளாகிய பரனுக்கும், '**சி**' காரத்தைச் சிவனுக்கும், '**ந**' காரத்தைத் திரோத மலத்திற்கும், '**ம**' காரத்தை ஆணவமலத்திற்கும் உரியதாக்கினர்.

தொடக்க முறையில் '**நகார மகார**' ங்களாகிய மல எழுத்தை முன்வைத்து, '**நமசிவய**' என்றும்.

இரண்டாம் முறையில் '**நகார மகார**' ங்களாகிய மல எழுத்தை ஈற்றில் வைத்துச் **சிவாயநம** என்றும்

மூன்றாம் முறையில் மல எழுத்துக்களை நீக்கி விட்டு, '**சி**' காரத்தை முதலாக்கிச் '**சிவய**' என்றும் வழங்கினர். அச் சிவய என்பதுடன் ஐந்து எழுத்து ஆதற் பொருட்டு, '**சிவ**' என்பதைச் சேர்த்து சிவயசிவ என்றும் வழங்கினர்.

இந்த முறையில் '**நமசிவய**' என்பதைத் **தூல பஞ்சாக்கரம்** என்றும், **சிவயநம** என்பதைச் **சூக்கும பஞ்சாக்கரம்** என்றும், **சிவய** (அல்லது) **சிவயசிவ** என்பதை **அதிசூக்கும பஞ்சாக்கரம்** என்றும், அறிஞர் வழங்கி வருதலாகினர்.

அதிசூக்கும பஞ்சாக்கரத்தில் நகார, மகாரங்களாகிய மலஎழுத்துக்கள் இல்லாமையால் இதனை **அவம் நீங்கிய பஞ்சாக்கரம்** (அல்லது) **அவாயம் நீங்கிய பஞ்சாக்கரம்** எனவும் வழங்கி வருவராகினர்.

திருமந்திரத்தில் **அபாயம், உபாயம்** என்கின்ற சொற்கள் வரவில்லை. அதிசூக்கும பஞ்சாக்கரத்தைச் சொல்லுமிடத்தில் **அவாயம்** என்கின்ற சொல் வருகின்றது. மற்றோர் இடத்தில் '**அவம்**' என்கின்ற சொல் வருகின்றது. ஔவையார் அருளிய நல்வழியின் பதினைந்தாம்பாடல் திருமூலரின் திருமந்திரக் கருத்தைப் பின்பற்றியதாகும் என்பதைப் பின்வரும் அப்பாடலில் உள்ள பாட வேறுபாட்டால் உணர்க.

**சிவாய [1]சிவவென்று சிந்தித்து இருப்போர்க்கு**
**[2]அவாயம் ஒருநாளும் இல்லை [3]உவாயம்**
**இதுவே மதியாகும் அல்லாத எல்லாம்**
**[4]விதியேய் மதியாய் விடும்.**

பாடபேதம் :

1. நம 2. அபாயம் 3. இதுவே 4. விதியே.

# பின்னிணைப்பு - 2

## துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய நூற்பட்டியல்

1. சோணசைல மாலை
2. திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி
3. திருவெங்கைக் கோவை
4. திருவெங்கைக் கலம்பகம்
5. திருவெங்கை உலா
6. திருவெங்கை அலங்காரம் (இந்நூல் கிடைக்கப் பெறவில்லை)
7. சிவப்பிரகாச விகாசம்
8. தருக்க பரிபாடை
9. நால்வர் நான்மணிமாலை
10. சதமணி மாலை
11. சிவஞான பாலய சுவாமிகள் நெஞ்சுவிடுதூது
12. சிவஞான பாலய சுவாமிகள் தாலாட்டு
13. சிவஞான பாலய சுவாமிகள் பிள்ளைத்தமிழ்
14. சிவஞான பாலய சுவாமிகள் கலம்பகம்
15. சிவஞான பாலய சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி

16. திருக்கூவப்புராணம்

17. பிரபுலிங்க லீலை

18. வேதாந்த சூடாமணி

19. சித்தாந்த சிகாமணி

20. பழமலை அந்தாதி

21. பிட்சாடன நவமணிமாலை

22. கொச்சகக் கலிப்பா (இந்நூல் கிடைக்கப் பெறவில்லை)

23. பெரிய நாயகியம்மை கட்டளைக் கலித்துறை

24. பெரிய நாயகியம்மை நெடுங்கழிநெடில் ஆசிரிய விருத்தம்

25. ஏசுமதநிராகரணம் (3 பாடல்களே கிடைத்துள்ளன)

26. நன்னெறி

27. சிவநாம மகிமை

28. தலவெண்பா (இந்நூல் கிடைக்கப்பெறவில்லை)

29. இட்டலிங்க அபிடேக மாலை

30. இட்டலிங்க நெடுங்கழி நெடில்

31. இட்டலிங்க குறுங்கழி நெடில்

32. இட்டலிங்க நிரஞ்சன மாலை

33. இட்டலிங்க கைத்தல மாலை

34. சீகாளத்திப் புராணம்

# பின்னிணைப்பு - 3
# அடிகளாசிரியரால் பதிப்பிக்கப்பெற்ற சிவப்பிரகாசரின் நூல்கள்

**பேராசிரியர் திரு. அடிகளாசிரியர்** அவர்கள் சிவப்பிரகாசரின் நூல்களை மூலத்துடன், மூலமும் உரையுடன் தாமே பதிப்பித்தும், பிறநிறுவனங்கள் மூலமாகப் பதிப்பித்தும் வழங்கியுள்ளார். அதன் பட்டியல் வருமாறு.

1. சதமணிமாலை மூலம் மட்டும் - 1938 - மயிலம் பொம்மபுரஆதீனம்
2. சிவப்பிரகாச விகாசம் மூலம் மட்டும் - 1939 - மயிலம் பொம்மபுர ஆதீனம்
3. சிவப்பிரகாச விகாசம் மூலமும் உரையும் - 1977 - சரசுவதி மகால் நிலையம், தஞ்சாவூர்.
4. சதமணிமாலை மூலமும் உரையும் - 1990 - சொந்த வெளியீடு
5. சித்தாந்த சிகாமணியில் அங்கத்தலத்திரட்டு - 1992 - சொந்த வெளியீடு.
6. ஸ்ரீ சிவஞான பாலையதேசிகர் திருப்பள்ளி எழுச்சி மூலமும் உரையும் - 1933. - மயிலம் பொம்மபுர ஆதீனம்.
7. இட்டலிங்க அபிடேக மாலை மூலமும் உரையும் - 2001 - சொந்த வெளியீடு
8. பிரபுலிங்கலீலையில் அருள்திருவசவதேவர் திருஅவதாரப் பாடலும் உரையும் - 2001 - சொந்த வெளியீடு.
9. பிரபுலிங்கலீலை மூலமும் உரையும் - அச்சில் மயிலம் பொம்மபுர ஆதீனம்
10. சிவநாம மகிமை உரை - 2011. (சொந்த வெளியீடு, கயிலாயநாதர் பதிப்பகம்)
11. ஸ்ரீசிவஞான பாலைய தேசிகர் கலம்பகம் மூலமும் உரையும் (கையெழுத்துப் பிரதி அச்சாகவில்லை)

.....................

# பின்னிணைப்பு - 4

## தமிழறிஞர் அடிகளாசிரியர் அவர்களின்
## ஆக்கத்தில்
## உரையில்
## பதிப்பில்

**வடிவங் கொண்டெழுந்த அருந்தமிழ் நூல்கள் அறுபத்து ஐந்தின் பட்டியல் (ஆண்டு நிரலாக 1936 - 2011)**

| வ. எண். | நூற் பெயர் | ஆண்டு |
|---|---|---|
| 1. | வீரசைவப் பிரமாணம் (உரைநடை-சுவடிப்பதிப்பு) | 1936, 2008 |
| 2. | எங்களூர் (உரைநடை - ஆக்கம்) | 1937, 2004 |
| 3. | சதமணி மாலை (செய்யுள் - மூலம்) | 1938 |
| 4. | சிவப்பிரகாச விகாசம் (செய்யுள் - மூலம் - சுவடிப்பதிப்பு) | 1939 |
| 5. | பிள்ளைப்பாட்டு (ஆக்கம் - செய்யுள்) | 1945 |
| 6. | ஆறகழூர்க் காமநாதர்க் கோவை (செய்யுள் - மூலம் - ஓலைச்சுவடிப்பதிப்பு) | 1947 |
| 7. | திருஅரசிலிக்காதை (ஆக்கம் - செய்யுள் - தலபுராணம்) | 1948 |
| 8. | தொடக்கப்பள்ளி (ஆக்கம் - நாடகம்) | 1949-2010 |
| 9. | திருவலஞ்சுழி தேவாரப் பாடல்கள் - உரை | 1956 |

| வ. எண். | நூற் பெயர் | ஆண்டு |
|---|---|---|
| 10. | மேன்மைப் பதிகம் (செய்யுள் - மூலம்-சுவடிப்பதிப்பு) | 1957 |
| 11. | தமிழகக் கல்வெட்டுகள் (ஆராய்ச்சி உரை - மு. கோவிந்தராசனுடன் இணைந்து) | 1957 - 58 |
| 12. | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் பாட்டும் சொற்பொருள் உரையும் | 1958 |
| 13. | சதுர்லிங்க தசகோத்திர தசகம் (செய்யுள் - பதிப்பு) | 1958 |
| 14. | குழந்தை இலக்கியம் (ஆக்கம் - செய்யுள்) | 1964 |
| 15. | சான்றாண்மை (ஆக்கம் - செய்யுள்) | 1964, 1975 |
| 16. | சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பாட்டும் சொற்பொருள் உரையும் | 1967 |
| 17. | அருணகிரி அந்தாதி (பொழிப்புரை - சரசுவதி மகால் வெளியீடு) | 1967 |
| 18. | மருதூர் அந்தாதி-பழைய உரை (சரசுவதி மகால் வெளியீடு) | 1968 |
| 19. | காலச் சக்கரம் (சோதிடம் - சுவடிப்பதிப்பு - சரசுவதி மகால் வெளியீடு) | 1969, 1979 |
| 20. | தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - இளம்பூரணர் உரை (பதிப்பு) | 1969 |
| 21. | வராகர் ஓரா சாத்திரம் - பழைய உரையுடன் (சுவடிப்பதிப்பு - சோதிடம்) | 1970, 1981, 1991 |
| 22. | சிவஞான தீபம் - உரை (சரசுவதி மகால் வெளியீடு) | 1970 |
| 23. | வீரசைவ சிவபூசா விதி (உரைநடை - பதிப்பு) | 1976, 1997, 2008 |

| வ. எண். | நூற் பெயர் | ஆண்டு |
|---|---|---|
| 24. | சிவப்பிரகாச விகாசம் - மூலமும் உரையும் (சரசுவதி மகால் வெளியீடு) | 1977 |
| 25. | ஐவகையடியும் என்னும் தொல்காப்பிய நூற்பா விளக்கம் (சென்னைப் பல்கலைக் கழகம் வெளியீடு) | 1977 |
| 26. | தமிழிலக்கண, இலக்கியங்களில் சைவ சித்தாந்தம் (மதுராந்தகம் குருகுலம் வெளியீடு) | 1978 |
| 27. | வடசென்னிமலை திருமுருகன் தோத்திரப்பாமாலை (ஆக்கம்) | 1980, 2004 |
| 28. | அரசியல் இயக்கம் (ஆக்கம் - செய்யுள்) | 1981 |
| 29. | திருவாசகம் கோயில் திருப்பதிகம் - சொற்பொருள் உரை | 1981 |
| 30. | பல்சுவைப் பண்ணத்திப் பாடல்கள் - (ஆக்கம்) குழந்தை இலக்கியம் II. | 1983 |
| 31. | அருள்திரு மாரியம்மன் திருப்பதிகம் (ஆக்கம்) | 1984 |
| 32. | உளத்தூய்மை (ஆக்கம் - செய்யுள்) | 1984, 1994, 2004,2005, 2009 |
| 33. | விலையேற்றமும் வாழும் வழியும் (ஆக்கம்) | 1984 |
| 34. | தொல்காப்பியம் - பொருளதிகாரம் - செய்யுளியல் இளம்பூரணர் உரை (தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பு) | 1985 |
| 35. | சிவபுராணச் சிற்றுரை - உரைநடை | 1986, 1999, 2007 |
| 36. | தொல்காப்பியம் - சொல்லதிகாரம்- இளம்பூரணர் உரை (தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பு) | 1988 |
| 37. | தண்ணிழல் (செய்யுட் காப்பியம்) | 1990-2009 |
| 38. | சதமணி மாலை மூலமும் உரையும் | 1990 |

| வ. எண். | நூற் பெயர் | ஆண்டு |
|---|---|---|
| 39. | சித்தாந்த சிகாமணியின் அங்கத் தலத் திரட்டு (கருத்துரை) | 1992 |
| 40. | ஸ்ரீமத் சிவஞான பாலதேசிகர் திருப்பள்ளி எழுச்சி - உரை | 1993 |
| 41. | மறவர் நத்தக் குன்றமரும் திருமுருகன் திருவடிப் பாமாலை (ஆக்கம் - செய்யுள்) | 1993 |
| 42. | தொழிலியல் (ஆக்கம் - செய்யுள்) | 1993, 2009 |
| 43. | மெய்ப் பொருட்காதை (ஆக்கம் - செய்யுள்) | 1995 |
| 44. | தமிழ் மாண்பும் தமிழ்த்தொண்டும் (ஆக்கம் - செய்யுள்) | 1996 |
| 45. | திருமூலரும் பேருரையும் (தமிழக அரசின் பரிசு பெற்றது) | 1998 |
| 46. | ஒன்பான் கோள் வணக்கப் பாடல்கள் (ஆக்கம் - செய்யுள்) | 1999 |
| 47. | திருமூல ஔவையார் அருளிய நல்வழி - மூலமும் உரையும் | 1999 |
| 48. | காயத்துள் நின்ற கடவுள் (ஆராய்ச்சி உரை) | 1999 |
| 49. | குதம்பைச் சித்தர் பாடலும் உரையும் | 1999 |
| 50. | திருவாசக அநுபூதி (ஆராய்ச்சி உரை) | 2000 |
| 51. | கீதையின் அறிவுப் பொருள் (ஆராய்ச்சி உரை) | 2000 |
| 52. | இட்டலிங்க அபிடேக மாலை என்னும் திருமுழுக்காட்டு மாலை மூலமும் உரையும் | 2001 |
| 53. | திருமந்திர உணர்வு (ஆராய்ச்சி உரை) | 2001 |
| 54. | சசிவன்ன போதம் மூலமும் உரையும் | 2002 |
| 55. | திருமூலரின் முப்பது உபதேசம் (ஆராய்ச்சி உரை) | 2002 |

| வ. எண். | நூற் பெயர் | ஆண்டு |
| --- | --- | --- |
| 56. | பஞ்சதிகார விளக்கம் மூலமும் உரையும் | 2003 |
| 57. | சிறுவர் இலக்கியம் (குழந்தைப் பாடல்கள்) | 2004 |
| 58. | திருமந்திரத்தில் எட்டாந்தந்திரம் - மூலமும் உரையும் | 2005 |
| 59. | நல்லவை நாற்பது (குகையூர் தமிழ்ச்சங்க வெளியீடு) | 2005 |
| 60. | திருநாளைப் போவார் திருக்காதை (ஆக்கம் - செய்யுள்) | 2006 |
| 61. | பெருந்திரட்டு - உபதேசப்பணை | 2006 |
| 62. | திரு.அடிகளாசிரியர் அவ்வப்போது பாடிய தனிப்பாடல்கள் | 2007 |
| 63. | தொல்காப்பியம் - பொருளதிகாரம் - எட்டு இயல்கள் (செய்யுளியல் நீங்கலாக - தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பு) | 2008 |
| 64. | தொல்காப்பியச் செய்யுளியல் ஆராய்ச்சி | 2008 |
| 65. | வீராகமம் மூலமும் பொழிப்புரையும் | 2011 |

........................

எல்லாரும் ஒருமனத்தால் இயற்றுவமே தமிழ்த்தொண்டு
எல்லாரும் ஒருமனத்தால் இயற்றுவமே தமிழ்வளர்ச்சி
எல்லாரும் ஒருமனத்தால் இயற்றுவமே தமிழ்ப்புதுநூல்
எல்லாரும் ஒருமனத்தால் இயற்றுவமே தமிழ்த்திருநாள்

-அடிகளாசிரியர்-

சிவய சிவய

# சிவப்பிரகாசர் அருளிய
# சிவநாம மகிமை மூலமும் உரையும்

உரையாசிரியர் : திரு. அடிகளாசிரியர்
பதிப்பாசிரியர் : அ. சிவபெருமான்

திரு. அடிகளாசிரியர்

சிவய சிவய

ISBN : 978-81-921531-0-0